**மைலோ சைக்கிள் அணிவகுப்பு ஆயிரம் மைலோ சைக்கிள்களால் கொழும்பு மாநகர வீதிகளை உலக சிறுவர் தினத்தன்று பச்சை தோய்த்தது**

*ஆரோக்கியமான காலையுணவு மற்றும் வினைதிறன் நிறைந்த வாழ்க்கைமுறைக்கு சிறுவர்களை ஊக்குவிக்கின்றது*

*மைலோ*, தான் முன்னெடுத்த 'Mom, Me and My *Milo*' என்ற பிரபலமான பிரச்சாரத்தின் மாபெரும் இறுதிப் போட்டியைக் குறிக்கும் முகமாக, சர்வதேச சிறுவர் தினத்தை 1,000 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து கொண்டாடியுள்ளதுடன், பாரியளவிலான மைலோ சைக்கிள் அணிவகுப்பு ஒன்றை ஏற்பாடு செய்து கொழும்பின் வீதிகளுக்கு பச்சை தோய்ந்த அழகுநயம் சேர்ப்பித்துள்ளது.

சிறந்த போஷாக்கு மற்றும் சுறுசுறுப்பு மிகுந்த வாழ்க்கைமுறை ஆகியவற்றின் முக்கியத்துவத்திற்கு வலுவாக குரல் கொடுத்துவருகின்ற ஒரு வர்த்தகநாமம் என்ற வகையில், மைலோ சிறுவர்கள் வினைதிறன் நிறைந்த செயற்பாடுகளை அவர்களுக்கு விநோதமளிக்கும் வகையில் மேற்கொள்ளச் செய்வதை இலக்காகக் கொண்டுள்ளது. அனேகமான சிறுவர்கள் தமது பொழுதுபோக்கு நேரங்களில் சைக்கிள் சவாரியை பிரபலமான ஒரு செயற்பாடாக முன்னெடுத்து வருவதால் அதன் மூலமாக சிறுவர்கள் தமது குடும்பத்தினருடன் சேர்ந்து ஆரோக்கியமான வாழ்க்கைமுறையை முன்னெடுப்பதை 'Mom, Me and My *Milo*' பிரச்சாரமானது ஊக்குவித்திருந்தது.

கவர்ச்சிகரமான நிகழ்வாக, மைலோ வர்த்தகநாமமிடப்பட்ட 1,000 சைக்கிள்கள், இதில் பங்குபற்றிய ஏனைய பல்லாயிரக்கணக்கானவர்களுடன் இணைந்து, விளையாட்டு அமைச்சின் மைதானத்திலிருந்து புறப்பட்டு, அழகிய கொழும்பு நகரில் பவனியாக வலம்வந்தனர். அதனைத் தொடர்ந்து சைக்கிள் பவனி மீண்டும் புறப்பட்ட இடத்தைச் சென்றடைந்து, அங்கு மாபெரும் விழாவுடன் கொண்டாட்ட நிகழ்வுகள் தொடர்ந்தும் இடம்பெற்றிருந்தன.

*''சிறுவர்கள் தமது அன்னையரின் உறுதியான ஊக்குவிப்புடன், வெளிப்புற செயற்பாடுகளில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபடுவதைக் காண்பது மிகுந்த மனநிறைவளிக்கின்றது. உடற்பயிற்சிகள் நிறைந்த வாழ்க்கைமுறையை நேசிக்கும் சிறுவர்கள் மற்றும் தமது சிறுவர்களுக்கு மிகச் சிறந்த போஷாக்கினைக் கொடுப்பதில் பெருமிதம் கொண்டுள்ள முற்போக்கான அன்னையர் ஆகியோருடன் மைலோ கொண்டுள்ள உறுதியான பிணைப்பிற்கு இதில் அனைவரும் ஆர்வத்துடன் பங்குபற்றியுள்ளமை சிறந்ததொரு சான்றாகும். மைலோ சைக்கிள் பவனி மீண்டும் ஒரு முறை மகத்தான வெற்றியை ஈட்டியுள்ளதையிட்டு நாம் மிகவும் பூரிப்படைந்துள்ளதுடன், சுறுசுறுப்பான வாழ்க்கை முறையை ஊக்குவித்து, 'வெற்றி உணர்வுக்கு உரமூட்டுவதை' தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதை ஆவலுடன் எதிர்பார்த்துள்ளோம்,''* என்று நெஸ்லே நிறுவனத்தின் பான வகை உற்பத்திப் பிரிவிற்கான பிரதித் தலைமை அதிகாரியான நோர்மன் கன்னங்கர அவர்கள் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வானது சிறுவர்களுக்கும் அவர்களது அன்னையருக்கும் இடையிலான பாசப் பிணைப்பை உரமூட்ட உதவியுள்ளது மட்டுமன்றி, விளையாட்டுக்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் மூலமாக ஆரோக்கியமான வாழ்க்கைமுறையை முன்னெடுப்பதன் முக்கியத்துவத்தையும் அவர்களின் மனங்களில் விதைத்துள்ளது. இலவசமான போஷாக்கு ஆலோசனைகளை வழங்கிய விசேட நெஸ்லே போஷாக்கு-மையம், காலையுணவின் முக்கியத்துவம் தொடர்பில் சிறுவர்களுக்கும் அவர்களது பெற்றோருக்கும் அறிவூட்டி, தினசரி ஆரோக்கியமான காலையுணவை உட்கொள்வதற்கு அவர்கள் உறுதிபூணுவதை ஊக்குவித்தமை குறிப்பிடத்தக்கது.

*''சிறுவர்கள் வினைதிறன் நிறைந்த வாழ்க்கைமுறையை முன்னெடுப்பதை மைலோ எப்போதும் ஊக்குவித்து வந்துள்ளது. இரு தசாப்தங்களுக்கும் மேலாக பாடசாலை மட்ட விளையாட்டு நிகழ்வுகளுக்கு நாம் உறுதியாக ஆதரவளித்து வந்துள்ளதுடன், ஒவ்வொரு ஆண்டும் இளம் திறமைசாலிகளை வளர்த்து, பல நூறாயிரக்கணக்கான நம்பிக்கையூட்டும் விளையாட்டு வீரர்களுக்கு வலுவூட்டியுள்ளோம். உறுதி, வலிமை மற்றும் ஆளுமை பொருந்திய நபர்களாக மிளிர சைக்கிள் சவாரி உதவுவதால், மைலோ நாடெங்கிலும் சிறுவர்களை சைக்கிள் சவாரி செய்வதை ஊக்குவித்து வருகின்றது. சிறுவர்கள் உடல்ரீதியாக செயற்பாடுகளைக் கொண்டுள்ளவர்களாக இருப்பதை ஊக்குவிப்பதற்கு, நெஸ்லே முன்னெடுத்து வருகின்ற பல முன்னெடுப்புக்களில் இதுவும் ஒரு அங்கமாகும்,''* என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஷிவானி ஹெக்டே அவர்கள் குறிப்பிட்டார்.

'Mom, Me and My *Milo*' பிரச்சாரமானது, தொடர்ந்து இரண்டாவது ஆண்டாகவும் இடம்பெறுவதுடன், மைலோ ரசிகர்களான சிறுவர்கள் தமது அன்னையருடனும், மைலோ பக்கட் ஒன்றுடனும் செல்ஃபி புகைப்படமொன்றை எடுத்து அனுப்புவதன் மூலமாக இப்பிரச்சார முன்னெடுப்பில் இணைந்து கொள்ள முடியும். அதிர்ஷ்டக் குலுக்கல் சீட்டிழுப்பு மூலமாக 1,000 வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, மைலோ வர்த்தகநாமமிடப்பட்ட சைக்கிள்கள் பரிசாக வழங்கப்படுகின்றன. இதற்கு நுகர்வோர் மத்தியிலிருந்து மாபெரும் வரவேற்புக் கிடைத்துள்ளதுடன், அவர்கள் வர்த்தகநாமத்தின் மீது கொண்டுள்ள உறுதியான நம்பிக்கை மற்றும் நேசத்தை இது பிரதிபலிக்கின்றது.

நாடெங்கிலும் 20,000 வரையான பாற்பண்ணையாளர்களிடமிருந்து சேகரிக்கப்படுகின்ற புத்தம்புதிய உள்நாட்டு பாலின் நலச்செழுமையுடன் தயாரிக்கப்படுகின்ற *மைலோ*, இரும்புச்சத்து மற்றும் B விட்டமின்களின் செழுமை நிரம்பியது. குருணாகலிலுள்ள நெஸ்லே நிறுவனத்தின் நவீன தொழிற்சாலையில், உலகெங்கிலும் பிரபலமான நெஸ்லே நிறுவனத்தின் உயர் தர நிர்ணய நடைமுறைகளின் கீழ் தயாரிக்கப்பட்டு வருகின்றது.